## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No.334/2007

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 23ம் தேதியன்று **PW.3** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.**, முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சுமதி** | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள 2ம் பிரதிவாதி **M/s. Raji thangam textile** நிறுவனத்தின் தொகை செலுத்தும்படி கோரிய அறிவிப்புகளை கொண்டு வந்துள்ளேன். அது சாசாஆ 2. 2ம் பிரதிவாதி **M/s. Raji thangam textile** சாசாஆ 2 அறிவிப்பில் உள்ள மின் இணைப்பு எண்.325 புவனேஷ்வரி பெயரில் உள்ளது. சாசாஆ 2 அறிவிப்பு 1998 – 99 வருட காலகட்டத்தில் மேற்படி 2ம் பிரதிவாதி நிறுவனம் நடைமுறையில் இருந்தது. மேற்படி 98 – 99 வருட காலகட்டத்தில் புவனேஷ்வரி தவிர வேறு நபர்கள் இயக்குநர்களாக இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. மற்ற இயக்குநர்களுக்கு அறிவிப்பு அனுப்பாமல் புவனேஷ்வரிக்கு மட்டும் அனுப்பிய அறிவிப்பு தவறானது என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாசாஆ 2 ல் 9 மற்றும் 11 மாதங்களுக்கு மட்டும் தான் மின் கட்டணம்

செலுத்தவில்லை என்றால் சரிதான். சாசாஆ 2 ஐ 9 மற்றும் 11 மாதங்களுக்கான கேட்பு அறிவிப்பு என்றால் சரிதான். அதற்கு முந்தைய அறிவிப்புகளை நான் கொண்டுவரவில்லை. மின் இணைப்பு எண் 325 கம்பெனியுடையது என்றால் சரிதான். அதை யார் நிர்வாகம் செய்திருக்கிறார்கள் என்று நிர்வாக ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும் எங்களுக்கு தெரியாது. மேற்படி காலகட்டத்தில் 2ம் பிரதிவாதி நிறுவனம் செயல்பட்டதா இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது. வாதி வழக்கிற்கும் சாசாஆ 2 க்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன்.

8, 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சாசாஆ 2 புவனேஷ்வரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் நிறுவனத்தின் மற்ற இயக்குநர்களை சாசாஆ 2 ல் குறிப்பிடவில்லை.சாசாஆ 2 ன் 2ம் பக்கத்தில் உள்ள யுனிட் விவரம் கணக்கீடு செய்து தான் காட்டப்பட்டுள்ளது. 98 – 99 காலகட்டத்தில் பழனிசாமி மற்றும் சின்னசாமி ஆகியோர் இயக்குநர்களாக இருந்தார்களா என்று என்னால் சொல்ல இயலாது. சாசாஆ 2 அறிவிப்பின் படி அன்றைய தினம் யார் அனுபவத்தில் இருந்தார்களோ அவர்கள் தான் மின் இணைப்பு தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். 8 , 9 பிரதிவாதிகளுக்கும் சாசாஆ 2 க்கும் சம்மந்தம் இல்லை என்றால் அதை என்னால் சொல்ல இயலாது.